**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 495/2021**
**வழக்கு சாட்சி PW–14**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகமது ரபி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஷாகிப் ஜான் | தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் (விருப்ப ஓய்வு) |
| கிராமம் | : | விக்கிரமசிங்கபுரம் | வயது | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 6th, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது விருப்ப ஓய்வு பெற்று விட்டேன். நான் கடையம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியில் இருந்தபோது, கடந்த 01.09.2018 ம் தேதி, 17.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, திருநெல்வேலி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி, 20.00 மணிக்கு மருத்துவமனை சென்று காயம்பட்ட ராமகிருஷ்ணன் என்பவரை விசாரித்தபோது, அவர் மேல்சிகிச்சைக்காக நாகர்கோவில் திரவியம் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றிருப்பதாக விபரம் தெரிந்து, அன்று இரவு 23.00 மணிக்கு அங்கு சென்று விசாரித்தபோது இராமகிருஷ்ணன் மயக்கநிலையில் இருந்ததால் 02.09.2018 ம் தேதி, காலை 07.00 மணிக்கு காயம்பட்ட இசக்கி என்ற இராமகிருஷ்ணன் என்பவரிடம் நடந்த சம்பவம் பற்றி புகார்வாக்குமூலத்தை பதிவு செய்து, காலை 11.00 மணிக்கு கடையம் காவல்

நிலையம் வந்து அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.260/2018, சட்டப்பிரிவுகள் 341, 294(பி), 307, 506(2) இதசவின் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை அம்பாசமுத்திரம் நீதித்துறை நடுவர் நீதீமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

கடையம் காவல்நிலையத்திலிருந்து திருநெல்வேலி அரசு மருத்துவமனை செல்வதற்கு எவ்வளவு நேரம் ஆகும் என்றால் ஒன்றரை மணிநேரம் ஆகும். மருத்துவமனையில் இருந்து தான் எனக்கு தகவல் வந்தது. அ.சா.1 ன் உறவினரிடம் இருந்து நான் புகார் மனு பெறவில்லை. மருத்துவரிடம் அ.சா.1 நல்ல மனநிலையில் இருந்தாரா? என்று நான் சான்று பெறவில்லை. அ.சா.1 ன் பெருவிரலில் அவர் கட்டு போட்டிருந்தார் என்றால் சரிதான். முதல்தகவல்அறிக்கையில் அ.சா.1 டம் நான் கையெழுத்து பெற்றேனா? என்றால் இல்லை. நான் சொன்ன நாளில், நேரத்தில் அ.சா.1 டமிருந்து திரவியம் மருத்துவமனையில் வைத்து நான் புகார் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 ல் உள்ள கைரேகை புகார்தாரரின் கைரேகை இல்லை என்றால் சரியல்ல. அறிவேன் சாட்சி கையெழுத்து நான் வாங்கியுள்ளேன். புகார் வாக்குமூலம் மற்றும் முதல்தகவல்அறிக்கை பின்னிட்டு மேலகுத்தபஞ்சான் கிராமத்தினரின் ஆலோசனையின் படி உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.07 14:48:18 +0530